# தமிழ் முரசு

முரசு:1 | TAMOUL MOURASSOU | ஒலி:௭


## இரண்டாவது சூரிய உதயம்

அன்றைக்குக் காற்றே இல்லை;
அலைகளும் எழாது செத்துப் போயிற்று
கடல்.

மணலில் கால் புதைதல் என
நடந்து வருகையில்
மறுபடியும் ஒரு சூரிய உதயம்.

இம்முறை தெற்கிலே —

என்ன நிகழ்ந்தது?
எனது நகரம் எரிக்கப்பட்டது;
எனது மக்கள் முகங்களை இழந்தனர்,
எனது நிலம், எனது காற்று
எல்லாவற்றிலும்
அந்நியப் பதிவு.

கைகளைப் பின்புறம் இறுகக் கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்களின் மீது
நெருப்பு,
தன் சேதியை எழுதியாயிற்று!
இனியும் யார் காத்துள்ளனர்?

சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக.

சேரன்


1983 ஆடி


கொடு தலை! கொடு உயிர்! விடுதலை தமிழ்க்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

## விடுதலைக்கான ஒரேவழி வெகுசனப் போராட்டமே!

தமிழீழத்திலும், சிறீலங்காவிலும் வாழுகின்ற அப்பாவித் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசபடையினராலும் சிங்களப் பேரினவாதத்தினாலும் தொடர்ந்து வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றன. இவற்றின் அவலப் பிரதிபலிப்புக்களாக கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு, குண்டுவீச்சு என்றெல்லாம் தமிழ் மக்கள் வதைபட்டுக் கொண்டும் பல இடங்களில் வாழ்வுடன் போராடிக் கொண்டும் இருக்கின்றனர். தலைமுறை தலைமுறையாக சிங்கள மக்களுடன் கலந்து வாழ்ந்த தமிழ் மக்களை மட்டுமல்ல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர், அரசியல் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், முஸ்லீம் மக்கள் இவர்களையெல்லாம் கூட சிங்களப் பேரினவாதம் தன் கோரத்தாக்குதலிலிருந்து தப்பவிடவில்லை.

இது இருபுறமிருக்க கந்தர்மடத்திலும், வவுனியாவிலும் அரசபடையினர் வெறியாட்டம் ஆடி, தமிழ் மக்களின் கோடிக்கணக்கான ரூபாக்கள் பெறுமதிவாய்ந்த உடைமைகளை எரியூட்டியும், கொள்ளையடித்தும், துவம்சம் செய்ததற்கு வெகுமதியாக 'அதிஉத்தமர்' ஜெயவர்த்தன ஆயுதப்படையினருக்கு அவசரகால நிலைப் பிரகடனத்தையும் அத்தோடு விசேடபரிசாக 'பொதுசனப் பாதுகாப்பு(?) சட்டத்தையும் அளித்துள்ளார். இச்சட்டத்தின் கீழ் இதுவரை தமிழிளைஞர்களை இரகசியமாக சுட்டுத்தள்ளிவந்த அக்கிரமிப்பு அரசபடையினர் இப்போது பகிரங்கமாகக் கொல்ல மட்டுமல்ல கொன்ற உடல்களை எந்தவித விசாரணையுமின்றி புதைக்கவும் கூடிய அதிகாரம் அரச அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டிருக்கிறது. இச்சட்டம் அமுலுக்கு வந்த நாள்தொட்டு வீதியோரங்களிலும், வெளிகளிலும் ஆங்காங்கே தமிழிளைஞர்களின் கொலைசெய்யப்பட்ட உடல்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. அக்கிரமிப்பு அரசபடையினரால் கோரத்தனமாகக் கொல்லப்பட்டு வரும் தமிழிளைஞர்களின் பட்டியல் நாள்தோறும் அதிகரிக்கிறது. நம் மக்கள் விடுகின்ற கண்ணீர் கங்கையாய் பெருக்கெடுத்துப் பாய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை துன்பங்களைச் சுமந்துகொண்டு ஈழத்தமிழினம் தவித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் கூட இந்த அவலங்களை உலகுக்குப் பகிரங்கப்படுத்தாமல்... சிறீலங்கா அரசின் அக்கிரமங்களை அம்பலப்படுத்தாமல் இன்றும் அதி உத்தமருடன் அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளைத் தொடருவதிலும், வெறும் நட்டஈட்டுக்காக அவரை வேண்டி நிற்பதிலும்... அவரை நம்பிக்கை நாயகனாக உலகுக்கு சித்திரித்துக் காட்டுவதிலும் ஈடுபட்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எம் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற இன்னல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேனும் சிறீலங்கா பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்காமல் இன்றும் பதவிகளில் ஒட்டிக்கொண்டிருப்பது அவர்களது சுயரூபங்களை தெளிவாக்குவது மட்டுமல்ல தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்பதற்கான புதிய மக்கள் தலைமை ஒன்று உருவாக வேண்டிய அவசியத்தையும்... அவசரத்தையும் காட்டுகிறது.

அதேவேளையில் இராணுவ அடிப்படையில் இயங்கும் இளைஞர்களின் சமீபத்திய ஆக்கிரமிப்பு அரசபடையினருக்கெதிரான தாக்குதல்களின் போது அவர்களது சில குழுக்கள் ஒருங்கிணைந்து இயங்கிய செய்தியும் இதர குழுக்களும் குறிப்பிட்ட செயற்திட்டங்களின்கீழ் நெருங்கி வருகின்ற செய்தியும் நம் உள்ளங்களில் நம்பிக்கை விதைகளைத் தூவுகின்றன. ஆனால் இந்த இளைஞர் இயக்கங்களின் போராட்டங்கள் வெறும் தாக்குதல்களுடன் மாத்திரம் நின்றுவிடக் கூடாது. உலகில் இயங்கிவரும் இதரவிடுதலை இயக்கங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை பாடமாகக் கொண்டு... திட்டமிட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மக்களிடமிருந்து வேறுபடாது அவர்களுடன் கலந்து... அவர்கள் உள்ளங்களில் விடுதலை வித்துக்களைத் தூவி... அவர்களை விடுதலைப் போராட்டத்தின் பார்வையாளராக அல்ல பங்காளராக மாற்ற வேண்டும். அடக்குமுறைக்கெதிரான வெகுஜனங்களின் திரட்சிதான் விடுதலைக்கான திறவுகோல் என்பதையும் மக்கள் புரட்சியின் மூலம்தான் தமிழீழ விடுதலை சாத்தியம் என்பதையும் இளைஞர் இயக்கங்கள் மறந்துவிடக் கூடாது. எனவே தமிழீழ விடுதலைக்கான மக்கள் போராட்டத்தை தொடங்கும் புனிதப்பணி துரிதமாக ஆரம்பமாகட்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- காந்தன் -

# ஈழத் தமிழகச் செய்திகள்

## ✵ 'ஈழத் தமிழருக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிறுத்து' எனக் கோரி தமிழக இளைஞன் தீக்குளிப்பு!

'இலங்கைத் தமிழருக்கு எதிரான கொடுமைகளை சிறீலங்கா அரசே நிறுத்து; இந்திய அரசே, தமிழீழ விடுதலைப் பிரச்சனையில் தலையிடு' என்று எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கியவண்ணம் தமிழக இளைஞரும் தி.மு.க. தொண்டருமாகிய 22 வயது நிரம்பிய ராஜசேகரன் என்ற இளைஞர் சிறீலங்காவின் துணைத் தூதரகம் முன்பு தன்னைத்தானே தீமூட்டிக் கொண்டார். அவ்விடத்துக்கு வந்த பொலிசாரால் மீட்கப்பட்ட இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரை கலைஞர் கருணாநிதி, பாண்டிச்சேரி முதல்வர் ம.இராமச்சந்திரன் ஆகிய பலர் பார்வையிட்டனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழக இளைஞர்களின் நெஞ்சங்களில் எவ்வளவுதூரம் வேரூன்றி வருகிறது என்பதற்கு இவ்விளைஞனின் அர்ப்பணிப்பு ஒரு எடுத்துக்காட்டாகும்.

## • தமிழீழக் கொள்கைக்கு த.வி.கூட்டணி தீ வைப்பு?

'தமிழர் விடுதலைக் கூட்டணி, தனது தமிழீழக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்யவும், தமிழ் மக்களிடம் 'நம்பகமான வேறு மாற்றுத் திட்டத்துடன்' செல்லவும் விருப்பம் விருப்பம் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் 'தன்' ஆங்கிலத் தினசரி நிருபர் ஜனசிங்காவுக்கு அளித்திருக்கும் பேட்டி ஈழத்தமிழ் மக்களிடையேயும் தமிழக மக்களிடையேயும் பெரும் கொதிப்பைத் தோற்றுவித்துள்ளது. இந்தச் செய்தி தவறானது என்று இதுவரை எந்த மறுப்பையும் திரு. அமிர்தலிங்கம் தெரிவிக்காததால் அவரது உண்மையான வேடங்கள் கலைந்துள்ளன. அது எப்படியிருப்பினும் அமிர்தலிங்கத்தின் இந்தக் கொள்கை மாற்றத்திற்கு சிறீலங்கா அரசாங்கத்தினதும் [illegible] ஆதரவும் கிட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறீலங்கா அரசின் அடக்குமுறைச் சட்டங்கள் அதிகரிக்கின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற பல கொடிய சட்டங்களை அமுல்படுத்தி தமிழ் மக்களை வாட்டி வதைத்து வரும் சிறீலங்கா அரசாங்கம் அவசரகாலப் பிரமாணங்கள் பலவற்றை 3.06.83 நள்ளிரவு முதல் அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது.

> நாட்டில் எப்பகுதியிலேனும் ஏதேனுமொரு பிரேதத்தை கையேற்பதற்கும், புதைப்பதற்கும் தகனஞ்செய்வதற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
>
> இதற்கு வகை செய்யும் பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் ஜனாதிபதியினால் அரச வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.
>
> மேற்படி சட்டத்தின் 15 ஆவது ஒழுங்கு விதியை திருத்தி ஜனாதிபதி வெளியிட்டுள்ள பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
>
> ஏதேனுமொரு பிரேதத்தைக் கையேற்பதற்கும் புதைப்பதற்கும் அல்லது தகனஞ் செய்வதற்கும் அவசியமாகும் எல்லா வழிகளையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் கையாளலாம்.
>
> அவ்விதம் புதைக்கவின் அல்லது தகனஞ் செய்தலின் நோக்கத்திற்கான அல்லது அதன் தொடர்பான கூட்டமொன்றில் சமுகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படக் கூடிய ஆட்களைத் தமது அதிகாரத்தின்படி தீர்மானித்தலும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் தரத்துக்குக் குறையாத பொலிஸ் உத்தியோகத்தர் எவருக்கும் அல்லது பொலிஸ் நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தருக்கு அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலருக்கு அல்லது ஆளுக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்,
>
> அத்துடன் அத்தகைய அலுவலரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அனுமதியின்றி அத்தகைய ஏதேனும் கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் அல்லது அவ்வலுவலரை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளைத் தடைசெய்யும் எவரேனுமாள் குற்றவாளியாவார்.
>
> இறந்தவர்களின் சடலங்கள் தொடர்பான இவ்விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கும் எந்த ஒரு அதிகாரியும் ஏனைய சட்டங்கள் எதற்கும் கட்டுப்பட வேண்டியதில்லை;

இப்பிரமாணங்களை அப்பாவித் தமிழ் இளைஞர்களை சிறீலங்கா அரசபடையினர் தொடர்ந்து அநியாயமாகக் கொலை செய்யும் குற்றங்களிலிருந்து அவர்களுக்குப் பூரண பாதுகாப்பு அளிக்கவே அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டன. இச்சட்ட அமுலாக்கலின் பின்னர் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் இளைஞர்கள் எக்காரணமுமின்றி ஆயுதப்படையினரால் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

## யாழ். மாவட்ட மக்களுக்கு மற்றுமொரு பயங்கர சட்டம்! புனித நகரில் வைத்து அதிஉத்தமர் கைச்சாத்து!

யாழ். மாவட்டத்தில் சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்தால் மரண தண்டனை அல்லது ஆயுள் சிறை விதிக்க வழிசெய்யும் 36(அ) என்னும் ஒழுங்கு விதிக் கட்டளையையும், பொதுக்கூட்டங்கள் குறித்த கட்டளையையும் சிறீத்தல புனித நகரான கிராமில் வைத்து அதிஉத்தமர் ஜெயவர்த்தன கைச்சாத்திட்டுள்ளார். சமீபத்தில் மாத்தளை மாவட்டத்தில் சட்டவிரோத ஆயுத தொழிற்சாலை வைத்திருந்த சிறிலங்கா பிரஜை ஒருவருக்கு 2,000/ரூபா அபராதம் மாத்திரம் தண்டனையாக விதிக்கப்பட்டது. எப்படி இருப்பினும் இத்தகைய அடக்குமுறைச் சட்டங்களின் மூலம் தமிழ் மக்களின் விடுதலை உணர்வை ஆக்கிரமிப்பு அரசு அடக்க நினைத்தால் அது வெறும் கனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலையில் பேரினவாதப் பயங்கரம்!

திருகோணமலை மாவட்டத்தில் யூன் முதலாம் திகதி முதல் தீவைப்பு, குண்டு வீச்சு, கொள்ளை, கத்திக்குத்து, துப்பாக்கிச்சூடு போன்ற பயங்கரவாதப் பேரினவாதத் தாக்குதல்களால் தமிழ்மக்கள் அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றனர். தமிழீழத் தலைநகரில் இன்று மக்கள் வாழ்வுக்குப் போராடிக்கொண்டிருக்கின்றனர். ஊரடங்குச் சட்ட நேரத்திலே ஆயுதப்படையினர் பாதுகாப்புடன் பேரினவாதக் காடையர்கள் அப்பாவித் தமிழ்மக்கள்மீது பயங்கரத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். திருமலையிலிருந்து தமிழ்மக்களை விரட்டுவதற்காக திட்டமிட்ட அடிப்படையில் இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம். இதுவரை வந்த செய்திகளின்படி பன்குளத்தில் சிறீஸ்கந்தராஜா என்னும் இளைஞர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். முள்ளிப்பொத்தானையில் நாகராஜா என்னும் இளைஞர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். உப்புவெளி உபதபாலதிபர் சிவானந்தன் கடமையிலிருக்கும்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார். அவரது வீடும் குண்டுவீச்சுக்கு உள்ளாகியது. பிரிமா ஆலையின் தமிழ் ஊழியர்கள் இவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளனர். இருபதுபேர் தாக்கப்பட்டுள்ளனர். 50க்கும் மேற்பட்ட வீடுகள் -திருமலை பா.உ.வின் இல்லம் உட்பட - குண்டுவீச்சுக்கு இலக்காகியுள்ளன. பல வர்த்தக நிலையங்கள், மலையக மக்களின் குடிசைகள் எரியூட்டப்பட்டுள்ளன. இத்தாக்குதல்கள் தொடர்கின்றன. பாதுகாப்பு எதுவுமின்றி தமிழ்மக்கள் பரிதவிக்கின்றனர்.

## எல்லைப் பிரதேசம் வவுனியாவிற்கு ஏற்பட்ட கதி!

2மைல்தூரம் தீச்சுவாலைகொழுந்துவிட்டெரிந்தது
காந்திய வாகனங்கள், விவசாயப் பண்ணைகள்,
பாடசாலைகள், அநாதை நிலையங்கள் தீக்கிரை!
எழுபது வர்த்தக நிலையங்கள் சாம்பராயின
மாணவர்கள், மக்கள்மீது பயங்கரத் தாக்குதல்
இரு வான் படையினர் கட்டுப்பாட்டைமீறி
அரச பயங்கரவாதம் கட்டுமீறியது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✹ தலைவாசிறது தமிழகம்!

இலங்கையில் தமிழீழ விடுதலைக்குப் போராடும் இளைஞர்களும், தமிழ்மக்களும் சிறிலங்கா பேரினவாதக் காடையர்களாலும், அரசபடைகளாலும் தொடர்ந்து கொடுமைகட்கு உள்ளாகி வருவதை ஆட்சேபித்தும், தமிழினப் படுகொலைச் சட்டங்களை நீக்குமாறு கோரியும், இது விடயத்தில் இந்திய அரசு பேசாமடந்தையாக இராது வங்கதேசத்தில் நடவடிக்கைபோல ஈழத்தமிழர்களை அழிவிலிருந்து காப்பாற்ற நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் யூனி- 2ம் திகதி தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளாலும் 5கோடித் தமிழ்மக்களால் இலங்கைத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு நாள் அனுட்டிக்கப்பட்டது. இதற்கான வேண்டுகோளை திராவிடக் கழக பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி விடுத்திருந்தார்.

## ● நல்லூரில் தமிழிளைஞன் சுட்டுக் கொலை!

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்குப் பின்புறத்தில் 25வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் பஞ்சநாதன் எக்காரணமுமின்றி 15.06.83 நள்ளிரவு 12.30 மணியளவில் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்திற்கு சில தினங்கள் முன்னர் 30.05.83 அன்று வல்வை இளைஞர் பழனிவேலு இராணுவத்தால் கோரமாகக் கொல்லப்பட்டதும் 1.06.83 இல் வவுனியா கோவில்குளம் பகுதியில் குமார் எனப்படும் சிதம்பரநாதன் இராணுவத்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததும் தெரிந்ததே. இதுதவிர வவுனியாவில் 45வயதுடையவர் ஒருவருடலும் பருத்தித்துறை மயானத்தில் இளைஞர் ஒருவரது சடலமும் துப்பாக்கித் தாக்குதலுக்கு உள்ளாகி கண்டுபிடிக்கப்பட்டது.

## ● அரு. கோபாலன் கைது! தவறான பாதையில் தமிழ்நாடு பொலிஸ்?

தமிழீழத் தோழமைக் கழகப் பொதுச் செயலாளரும், 'மர்மம்' இதழின் ஆசிரியருமான திரு. அரு கோபாலனை காந்திய தலைவர்களின் கைதுக்கு எதிரான சுவரொட்டிகளை சென்னை நகரில் ஒட்டியதைக் காரணம் காட்டி தமிழகப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் நீதிச் சுதந்திரத்திற்கு தொடர்ந்து ஆபத்து!

திருமதி விவியன் குணவர்த்தனவினால் பொலிஸாரின் அடிப்படை உரிமை மீறலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் நீதிமன்றம் விவியனுக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அரசாங்கமோ சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு மேற்படி சம்பவத்தின் போது திறமையாக செயற்பட்டதாகக் கூறிக் கொண்டு பதவி உயர்வு வழங்கியுள்ளது. அதுமாத்திரமல்ல அரசாங்கம் தன்னுடைய காடையர் கும்பலை இ.போ.ச. பஸ்களில் அனுப்பி மேற்படி தீர்ப்பை வழங்கிய நீதியரசர் கே.எல்.ஏ. ரணசிங்கவின் இல்லத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்ய விட்டுள்ளது. நீதியரசர் இதுகுறித்து உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்தபோது அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாடுமுழுவதுமுள்ள சட்டத்தரணிகள் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

## சிறீலங்காவின் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது

சமீபத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. சபையின் மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தில் சிறீலங்காப் பிரதிநிதி இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் அரசியல் புகலிடம் வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும் என்று தெரிவித்த ஆட்சேபனை மேற்படி கூட்டத்தலைவரால் நிராகரிக்கப்பட்டது.

## கோவை மகேசன், டாக்டர் தர்மலிங்கம் கைது!

தமிழீழ விடுதலை அணித் தலைவர் டாக்டர் தர்மலிங்கமும் அணியின் செயலாளரும் 'சுதந்திரன்' ஆசிரியருமான கோவை மகேசனும் சிறீலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1.07.83 இல் திருமலை வன்செயல்களுக்கெதிராக மேற்படி அணியால் மேற்கொள்ளப்பட்ட பூரண ஹர்த்தாலின் போது கோண்டாவிலில் வைத்து யாழ்தேவி புகையிரதத்தின் ஒரு பெட்டகம் இனந்தெரியா இளைஞர்களால் எரிக்கப்பட்டது. இது தொடர்பாக கோவையும் டாக்டரும் பொலிசாரின் விசாரணைக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதகுருக்கள் மீதான வழக்கு விசாரணைகள் ஆரம்பம்! அரசின் முட்டுக்கட்டைகள் நிராகரிக்கப்பட்டன!

வண. பிதா. சிங்ஞராயர் உட்பட வண. ஜெயதிலகராஜா, டாக்டர். ஜெயதிலகராஜா, திரு. திருமதி. நித்தியானந்தன் ஆகியோருக்கெதிரான வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்விசாரணைகளை நிறுத்திவைத்து, தொடர்ந்து இவர்களை கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்க முயன்ற அரசதரப்பு வாதங்கள் அனைத்தையும் நீதியரசர் நிராகரித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## 'உமா–பிரபாவை இணைக்க முயன்றார்' – காந்தீயத் தலைவர் மீது வழக்குத் தாக்கலாகும்!

சித்திரவதை செய்து ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்று பொய்வழக்குப் புனைவதில் புகழ்பெற்றுவரும் சிறீலங்கா அரசு காந்தீயத் தலைவர் டாக்டர். ராஜசுந்தரம் பிரிவுபட்டிருக்கும் விடுதலை இயக்கத் தலைவர்களான உமாமகேஸ்வரனையும், பிரபாகரனையும் மீண்டும் ஒன்றிணைக்க முயன்றதாக அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யவிருக்கிறது.

அதேபோல காந்தீயப் பிரமுகர் திரு. டேவிட் பாரிஸில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் தமிழீழப் போராளிகட்கு ஆயுதப்பயிற்சி கோரியதாக – அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்விருவரின் கைதுக்கு எதிராகவும் இவர்களுக்கு இழைக்கப்படும் சித்திரவதைகட்கு எதிராகவும் பல வெளிநாட்டியக்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

## 'சுதந்திரன்', 'சற்றடே றிவியூ' அலுவலகங்கட்கு சீல் வைப்பு!

சிறீலங்கா அரசின் கொடுமைகளை அம்பலப்படுத்தி தமிழீழ விடுதலைக் குரலாக ஒலித்து வந்த 'சுதந்திரனும்', ஆங்கில வார இதழான 'சற்றடே றிவியூ'வும் தடை செய்யப்பட்டு அவற்றின் அலுவலகங்களும் சீல் வைக்கப்பட்டுள்ளன. இன விடுதலைக்குப் போராடி வந்த இப்பத்திரிகைகள் இனவாதத்தை தோற்றுவிக்கும் செய்திகளை வெளியிட்டன என்று சிறீலங்காவின் இனவெறியரசு பொய்க்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * சிறீலங்கா அரசின் அடக்குமுறை அதிகரிக்க... அதிகரிக்க...

# * தமிழ்த் தேசியம் வளர்கிறது!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக சிறீலங்கா அரசு பல வழிகளாலும் அடக்குமுறைகளை அப்பாவித் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடுகின்ற இந்த வேளையில்.... அரசின் அக்கிரமங்களுக்கு எதிராகவும் தமிழீழ விடுதலையை வேண்டியும் தமிழ்மக்கள் தாங்கள் பேதங்களை மறந்து ஐக்கியப்பட ஆரம்பித்துள்ளனர். இனவாத அரசின் எதிர்பார்க்கை இருட்டிலே மூழ்க ஆரம்பித்துள்ளது மாறாக தமிழினத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கை நட்சத்திரங்கள் தென்பட ஆரம்பித்துள்ளன. சமீப காலச் சம்பவங்கள் இதற்கு சிறந்த சான்றாகும். தமிழ் மக்கள் தம்மிடையே இருந்த சமூக... வர்க்க... பிரதேச வேறுபாடுகளை மறந்து விடுதலையை மட்டும் மனதில் கொண்டு அணிதிரளவும் விடுதலைப் போராளிகட்கு ஆதரவளிக்கவும் ஆரம்பித்திருப்பதை இச்சான்றுகள் தெளிவாகவே நிரூபிக்கின்றன.

சமீப காலங்களில் தொடர்ச்சியாக பண்குளத்தில், கந்தர் மடத்தில், வவுனியாவில் வாழும் தமிழ்மக்கள் மீது அரசபயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட போது... அரசபடைகளின் அக்கிரமங்களால் அல்லல்களுக்குள்ளாக்கப்பட்டு... அநாதரவாக்கப்பட்டு... அகதிகளாய்... அநாதைகளாய் தவித்த மக்களுக்கு மறு வாழ்வளித்து... எரிந்த அவர்கள் குடிசைகளை சீரமைத்து... அவர்களின் நெஞ்சங்களிலே எதிர்காலம் பற்றிய நம்பிக்கை வித்துக்களை தூவியதில் மாத்திரமல்ல அவர்களை விடுதலைப் போராட்டத்தின் பங்காளர்களாக மாற்றியுள்ளதிலும் கூட தமிழ் தேசியத்தின் வளர்ச்சி தெரிகிறது.

எரிக்கப்பட்ட குடிசைகள் எந்தப் பிரதேசத்தவரினது... எந்த சமூகத்தினரது என்றோ அன்றி பாதிக்கப்பட்ட மக்கள் எந்தப் பிரிவினர் என்றோ தமிழினம் பேதம் பார்க்கவில்லை; பிரிவு நோக்கவில்லை. அல்லல்களை களைவதே ஒரே நோக்கமாயிற்று. இது தமிழினத்தின் வரலாற்றிலேயே [illegible] அம்சம் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்குளத்திலே மலையகமக்களின் குடிசைகள் எரிக்கப்பட்டபோது மொத்தத் தமிழினமும் பதறித்துடித்து பாதிக்கப்பட்டவர்க்கு பரிகாரம் தேட முன்வந்தது. கந்தர்மடத்தில் அரசகாடைத்தனத்தின் எதிரொலியாக 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இல்லங்களை இழந்து அகதிகளானபோது அவர்களின் கண்ணீரைத் துடைக்க நீண்ட கரங்களின் எண்ணிக்கை ஒரு வரலாற்றுச் சிறப்பம்சம் அல்லவா! இரவிலே அக்கிரமக்காரர்களால் எரிக்கப்பட்ட குடிசைகள் பலவற்றை இரவோடிரவாகவே சீரமைத்து குடிசைகளை மட்டுமன்றி தமிழ் இனத்தையும் சேர்த்து தலை நிமிரச் செய்த யாழ். பல்கலைக் கழக மாணவர்களாகும் ஏனைய தமிழீழ இயக்கங்களாகும் சேவை ஒரு புறம் தமிழ்த்தேசியத்துக்கு உரமூட்டியது என்றால்... எம் மக்கள் பாதிக்கப்பட்டுவிட்டார்கள் என்றதுடன் தமிழீழம் எங்குமுள்ள மக்கள் பதறித் துடித்ததுடன் மாத்திரமன்றி தம்மால் இயன்ற உதவிகளை வாரிவழங்கிய செயல் இன்னொரு புறம் தமிழ்த்தேசியத்திற்கு உயிரூட்டியது.

அரசபயங்கரவாதத்தின் பாதிப்பினால் வாழ்வழி தெரியாது நாளைய பொழுதை எண்ணி ஏங்கித் தவித்த மக்களின் கவலை தீர்க்க எத்தனையோ ஏழைக்குடும்பங்கள் தம்மால் இயன்ற உதவிகளை — எத்தனையோ வீடுகளில் பானை, சட்டிகளை, படுக்கைக்கு பாய்களை கூரை அமைக்க ஓலைகளை... கிடுகுகளை, பள்ளிச் சிறுவர்கள் தமது செலவுக்கு வைத்திருந்த சில்லறைகளை...— வழங்கிய சம்பவங்களை கேட்ட போது மனம் துன்பத்தையும் துயரையும் மறந்து இதயம் பூரித்து பெருமிதமடைகிறதல்லவா?

அதுமட்டுமா அன்புச் சகோதரர்கள் அங்கே படும் அவலங்களைக் கண்டு கொதித்தெழுந்து இனவாத அரசின் ஈனச் செயல்களை உலகிற்கு பகிரங்கப்படுத்தும் வகையில் பிரான்சில்... ஜேர்மனியில்... சுவிற்சலாந்தில்... நோர்வேயில்... கனடாவில்... அமெரிக்காவில்... அவுஸ்திரேலியாவில்... இங்கிலாந்தில்... இப்படித் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் அக்கிரமப்பு சிறீலங்கா அரசிற்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்... அமைதிப் போராட்டங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்கிறார்கள்... எல்லோருமே தமிழர்கள் அனைவரும் ஒரே பாதையில் அணிதிரள்வதைக் காட்டுகிறதல்லவா!

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் தாயகத் தமிழகத்தில் ஈ.ழத்தில் தமிழருக்கு இழைக்கப்படும் இன்னல்களை நிறுத்துமாறு கோரி தன்னுயிரை துச்சமென மதித்து தீக்குளித்தானே...! அச்செயல் தமிழன் வாழும் நாடு எதுவென்றாலும் அவன் மனம் இன்று ஈ.ழத்தில் தான் என்பதை நிரூபிக்கவில்லையா!

அதேவேளையில் இங்கே... பிரான்சில்... ஈ.ழத்தில் தமிழர்கட்கு இழைக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் முகமாக... அரசபயங்கரத்தால் இடமின்றி தவித்த ஏழைகட்கு உறையுள் அளிக்கும் முகமாக... நிதி திரட்ட முற்பட்ட தமிழ் ஈ.ழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்)க்கு ஏற்பட்ட அனுபவங்களோ மகத்தானவை... மறக்க முடியாதவை. தமிழ்த்தேசியம் எவ்வளவு தூரம் வேரூன்ற ஆரம்பித்து விட்டது என்பதற்கு சிறந்த உதாரணம். பேரவை எதிர்பார்த்த தொகையை விட இருமடங்கு தொகை நிதி குறிப்பிட்ட கால எல்லைக்கு முன்னரே கிட்டியது மாத்திரம் அல்ல எத்தனையோ மக்கள் தொலைபேசியூடாகவும் நேரடியாகவும் தம்மிடம் பணத்தை திரட்டுமாறு வேண்டுகோள் விடுத்ததும்.... கொள்கை வேறுபாடு கொண்டவர்கள் போட்டா போட்டியாக கூட்டப்பாடுகளை அலட்சியப்படுத்தி அல்லல்பட்ட எம் மக்களுக்கு புனர்வாழ்வளிக்க முற்பட்ட பேரவைக்கு தம்மால் முடிந்த நிதியினை வழங்கி கைகொடுக்க முன்வந்த அந்தக் கரங்கள்... அந்த நெஞ்சங்கள்... அந்தச் சம்பவங்கள்... எல்லாமே தமிழன் தேசிய ரீதியில் ஒன்றுபடுகிறான் ... இயங்கிவேற்று இயக்கங்கட்கு மட்டும் ஆதரவை அளிக்கிறான்... விடுதலைப் போராட்டத்தில் பங்காளன் எனும் அந்தஸ்த்தைப் பெற முயல்கிறான்.... இது அவனை விரைவில் விடுதலைக்கு இட்டுச் செல்லும் என்பதை தெளிவாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கிடும் தமிழா...!

அந்நிய நாட்டில் வாழும் தமிழா...!
நமது நிலம், மொழி, கல்வி, அனைத்தும் பறிபோகும்
இவ் வேளையிலே... இங்கு வாழும் நீ ஒரு மணி
நேரமெனினும் பறிபோகும் தாயகத்தை மீட்கும்
சிந்தனையை செய்திடுவாய். இங்கு வாழும்
தமிழினத்தை ஓரணிப்படுத்தி புரட்சிவழி காட்டிடுவாய்.
இன்று உனக்கு விடுதலை தவிர வேறெதுவும்
முக்கியமில்லை. ஈழத்தில் பலியாகும் ஒவ்வொரு
தமிழ் மகனையும் உனது உடன்பிறப்பாய்
நினைத்துப்பார். நீ இங்கு எந்தவழியில் பணம்
தேடினும் அதைக்கொண்டு அடிமைப்பட்ட
நாட்டில் நீ எப்படி நிம்மதியாக வாழ்வாய்...?
உன் நிலையை இனியாவது நீ உணர்வாய்.
பக்கத்தில் வீட்டில்தான் இராணுவம் என நீ
முடங்கியிருப்பாய். நண்பா! உன்வீடும் பக்கத்தில்
தான் என்பதை நீ மறந்தனையோ...?
ஈழத்தில் பலர் அநியாயமாய் கொல்லப்பட்டதும்
நீயறிவாய். அங்கே மக்கள் தினமும் அவலங்களுடன்
வாழ்வதையும் நீ அறிவாய். இவற்றை எல்லாம்
நீ அறிந்தும் அறியாதது போல் இங்கு வாழ்ந்தாலும்
பத்துமாதம் உன்னை சுமந்து பெற்ற அன்னையும்
பருவ வயது சகோதரியும் உற்றவரும் சுற்றமும்
அங்கேதான் வாழ்கிறார்கள் என்பதைக் கூட
நீ மறந்தனையோ....?
காந்திய இயக்கத்தில் கை வைத்த பின்பும்
அகிம்சை வழியில் ஊர்வலம் நடத்திய
ஆயிரக்கணக்கான உடன் பிறப்புக்கள்
சிறீலங்கா அரசபடையினரால் கொடுமைக்குள்ளான
பின்பும்... ஈழத்தின் உடமைகள் மீண்டும் மீண்டும்
தீக்கிரையாக்கப்பட்ட பின்பும்
இன்னும் என்ன தாமதம்...?
உடனே களம் நோக்கிப் புறப்படு
விடுதலைப் போராட்டத்தின் பங்காளராக....!

-அரியாலையூர் யோகராஜா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தறிகெட்ட தார்மீகம் தமிழ் "பரிசு!" * * * * * * *

தமிழீழம், சிறீலங்கா - இருநாடுகளிலும் வாழ்ந்து மக்களுக்கெதிராக சிறீலங்கா அரசு ஆயுதப் படைவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அதன் விளைவுகள்... உடமை இழப்புக்கள்... சொந்தச் சூறையாடல்கள். இதோ அந்த அவலங்களில் சில.....

## தீவடங்கிலும் பேரினவாதப் பேயாட்டம்

யாழ்ப்பாணம் மட்டுநகர் பேருந்துக்கு தீ வைப்பு!

பாணந்துறையில் தமிழர் கடைகளுக்கு தீவைப்பு!

நீர்கொழும்பில் தமிழ் இளைஞர் பலி

மட்டுநகரில் தமிழ் அகதிகள்!

நாரம்மலையிலும் தீ வைப்பு!

தெகிவளையில் கொள்ளை

மலையகத் தமிழர் குடிசைகள் எரிப்பு!

பிள்ளையார் கோவில் சேதம்!

கத்திக்குத்து

நிக்கவரெட்டியாவில் நகைக்கடை கொள்ளை

தோட்டத் தொழிலாளி கத்திக்குத்துக்குப் பலி!

குருநாகலில் வீடுடைப்பு

பேராதனையில் இரு கடைகளுக்கு தீவைப்பு

70 கடைகள் தீக்கிரை

மொரட்டுவையில் தமிழ் மாணவர்கள் தாக்கப்பட்டனர்!

காந்தீயத்துக்கு பத்து இலட்சம் ரூபா நட்டம்

உபபுவெளி தபாலதிபர் மீது துப்பாக்கிச் சூடு!

இந்திய பயணிகளிடம் கொள்ளை

டாக்டர் ... வீடு எரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு தருகின்ற

வருகின்ற அப்பாவித் தமிழ்
ளின் அடக்குமுறையையும் இன-
தொடர்ந்து பல தமிழ் உயிர்ப்பலி-
..எரிப்புக்கள்... அழிப்புக்கள்...



## தமிழர்களின் கடைகள்,
## வீடுகள், வாகனங்களுக்கு
## தீவைப்பு குண்டுவீச்சு தாக்குதல்

திருமலையில்
சிவன் கோவில்
தேருக்குத்
தீவைப்பு

அம்பாறை
தமிழ்
மாணவர்கள்
கல்முனையில்
தஞ்சம்!

சுன்னாகத்தில்
ஆயுதப்படையினர்
தாக்குதல்

ஆயரிடம்
ஆசிபெற
வந்தவர்களை
இராணுவத்தினர்
தாக்கினர்!

கேகாலையிலும்
கடையெரிப்பு

டாக்டர்
கணேசையா
உயிரிழந்தார்

பன்குளத்தில்
பிள்ளையார்
சிலைகள்
உடைக்கப்பட்டன!

திருகோணமலையில்
மறவூர் கொலை

அல்வாயில்
இளைஞரின
சடலம்

திவுலப்பிட்டியில்
தீவைப்பு

சுதந்திரத் தமிழீழம் மட்டும்தான் தமிழ்
மக்களின் துயர் துடைக்கும் ஒரேவழி. அதை
அடையும் வரை துன்பங்களும் துயரங்களும்தான் எம் கதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தலிங்கம்... அமிர்தலிங்கம்...



## TULF offers to drop demand for Eelam

INDIAN EXPRESS - 12/6/83

Express News Service

COLOMBO, June 21

The opposition Tamil United Liberation Front (TULF) leader, Mr. A. Amirthalingam was today quoted as saying that his party was ready to drop its demand for a separate Tamil Eelam state provided a reasonable solution to the Sri Lankan Tamils' problem was offered.

தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதற்கு த.வி. கூட்டணி தயார்!

அப்பா பிள்ளை அமிர்தலிங்கம் 'சன்' தினசரிக்குப் பேட்டி.

- இந்தியன் எக்ஸ்பிரஸ்
12.06.83.

---



'எம்.பி. பதவிகளை இராஜினாமா செய்யுமாறு எம்மை எவரும் கேட்கவில்லை. மாறாக அதிகர்கள் பலர் நேராகவும்... கடித மூலமும் இராஜினாமா செய்ய வேண்டுமென்பதையே வலியுறுத்தி வருகின்றனர்...'

- அமிர்தலிங்கம் - வீரகேசரி

'யூலை 27ந் திகதியுடன் பதவிநீங்கி மீண்டும் மக்களாணையைப் பெறுங்கள்'

- கூட்டணியின் கோப்பாய்க் கிளை

'தமிழ் மக்களுக்கெதிரான கொடும் சட்டங்கள் நீக்கப்படாவிடின்... இராணுவம் தமிழீழத்திலிருந்து மீளப்பெறப்படாவிடின்... கூட்டணி உறுப்பினர்கள் தமது சகல பதவிகளையும் இராஜினாமா செய்ய வேண்டும்'

- கூட்டணி ஊர்காவற்றுறை கிளை -

'சாத்வீகப் போராட்டங்களை நடத்தி பின் கூட்டணி எம்.பிக்கள் பதவி துறக்க வேண்டும்'

- கூட்டணி வட்டுக்கோட்டைக் கிளை -

'கூட்டணி எம்.பிக்கள் பதவி விலக வேண்டும்

- கூட்டணி கொடிகாமத்துறைக் கிளை -

'கூட்டணி எம்.பிக்கள் பதவி விலகி அர்த்தபூர்வமான முறையில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

- தமிழ் இளைஞர் பேரவை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்தும்... தொடர்ந்தும்

## கொலைகள்... கொள்ளைகள்... தாக்குதல்கள்...

## கைதுகள்... பழிவாங்கல்கள்...

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் வெறியாட்டம்!

■ திருமலையில் 24 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோதும் சிவயோகபுரத்தில் 31 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஆறு இந்து ஆலயங்கள் எரிக்கப்பட்டுள்ளன. விளாங்குளத்தில் எட்டு வீடுகள்... தமிழர்களின் கடைகள், உணவு விடுதிகள் குண்டுவீசித் தாக்கப்பட்டுள்ளன. யாழ் - திருமலை தனியார் பேருந்து வழிமறிக்கப்பட்டு சாரதி அடிப்பட்டுள்ளார். பயணிகள் வெட்டுக்காயத்துக்கும் தீக்காயத்திற்கும் உள்ளாகியுள்ளனர். திருமலை பொலிஸ் நிலையத்திலிருந்து தமிழ் பொலிஸ் அதிகாரிகள் அகற்றப்பட்டுள்ளனர்.

■ குருநாகலிலுள்ள தமிழ் உரிமையாளருடைய 'கன்ற' ஆடைத் தொழிற்சாலை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இதில் பணிபுரிபவர்கள் 99% சிங்களத் தொழிலாளர்களே.

■ இலங்கைக்கு உல்லாசப் பிரயாணம் வந்த இந்தியப் பயணிகள் பொலிசாரால் மிரட்டப்பட்டு பணம் பறிக்கப்பட்டுள்ளனர்.

■ இங்கிலாந்திலிருந்து வெளிவரும் உலகப்பத்திரிகையான 'கார்டியனின்' சிறப்பு நிருபரும் தமிழர் பிரச்சனையில் அக்கறை கொண்டவருமான பேராசிரியர் டேவிட் செல்போர்ன் இலங்கையிலிருந்து நாடுகடத்தப்பட்டுள்ளார்.

■ மாங்குளத்துக்கு அருகில் ரயில்பாதையில் கொலைசெய்யப்பட்ட 3 தமிழர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் குடியேறிய 250 மலையகத் தமிழர் குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

■ பெரிய கல்லாற்றில் 7 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். மட்[illegible] இரு இளைஞர்கள் விமானப்படையினரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாழ். பா. உ. யோகேஸ்வரன் மீண்டும் குருநகர் இரா ணுவ முகாமில் இருமணி நேர இராணுவ விசாரணைக்கு உள்ளாகியுள்ளார்.

- பொத்துவிலில் ஆறு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

- மூன்று ஆண்டுகள் ஜேர்மனியில் இருந்து திரும்பிய இரு இளைஞர் காலியில் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் ஜேர்மனியிலிருந்து வந்த 20 பேரின் கடவுச் சீட்டுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

- பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களது விடுதி கள் கல்வீச்சுக்குள்ளாகியுள்ளன. அப்புத்தளை யில் தோட்டத் தொழிலாளி ஐயாசாமி கத்தியால் குத் தப்பட்டு உயிரிழந்துள்ளார்.

- காந்தியப் பண்ணையில் பணிபுரிந்த பண்டத்தரிப் பைச் சேர்ந்த செல்வி ஜீனி பொன்னுசாமி தேடப் படுகிறார்.

- அநுராதபுரத்தில் முஸ்லீம் மீனவர்கள் தாக்கப் பட்டு வாள்வெட்டுக்குள்ளாகியுள்ளனர்.

## நிவாரண நிதி அளித்தோர்க்கு
## பேரவையின் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட ஏழைத் தமிழ் மக்களுக்கு நிவாரணமளிக்க... அவர்களது எரியுண்ட குடிசைகளை மீள அமைத்து... அவர்களது வாழ்வுக்கு வலிமையூட்ட அவர்களையும் விடுதலைப் போராட்டத்தின் பங்காளராக்க தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்) திரட்டிய நிவாரண நிதிக்கு நிதி யளித்தோர் அனைவர்க்கும் பேரவை தனது நன்றி களைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்நிதி பகுதிப் பகுதியாக தாயகத்துக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேற்படி நிதியைத் திரட்டிய முழு விபரங்களும் விரைவில் பேரவையால் வெளியிடப்படும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

TAMOUL MOURASSOU

MURASU - 1 ★ JUILLET-1983 ★ OLY - 9

## LES FORCES DU GOUVERNEMENT DE SRILANKA SONT DONNES D'AUTORITE ILLIMITE

Depuis 04-06-'83, les lois d'urgence ont promugulés à tuer les personnes qui font la lutte pour libération de Tamoul Eelam par les forces armées à Srilanka où les tamouls demandent l'indépendance. Les nouveaux lois permettent à force armée pour déposer les cadavres sans enquête dans le nord de Srilanka. Les responsable personnes ne sont pas besoin à informer judge ou pour faire une enquête à mort. C'est l'un des plus grands mesures sévères a été pris par le gouvernement de Srilanka pour supprimer la Nation Tamoule.

## PLUSIEURS JEUNES TAMOULS ONT ETE MORTS PAR LES FORCES ARMEES DE SRILANKA

Plusieurs jeunes tamouls ont été mourus par les forces armées sous les lois urgence à Srilanka. Un jeune tamoul nommé Palanivel Sabaratnam, agé 28 ans, a été tiré dans la camp militaire et tué par les forces securité le 30-05-'83.

L'autre jeune tamoul, agé 25 ans, a été arrêté par les forces armées à Vavuniya. Il est mort quand il était detenu dans la camp militaire. Il est mort après deux jours d'arrestation.

Trois cadavres ont été trouvés sur la voie de train à Mankulam qui est dans le nord du pays. Ils ont blessés par balle. L'un des trois a été identifié.

Un jeune tamoule a été tué à Nallur qui est

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 km de Jaffna. Il a été tué quand il était rentré chez lui après faire un décoration pour un marriage ceremonie chez son ami.

Le gouvernement de Srilanka est en train de continuer à tuer les tamouls parce qu'il veut opprimer la demande du tamoul.

LES PARTICIPANTS DANS LA FETE CENTENAIRE DU KARL MARX SONT ARRETES

Onze jeune tamouls avec M.Varatharajaperumal qui est un professeur de l'université ont été arrêtés par les forces armées de Srilanka à Baticoloa qui est situé dans le sud du Tamil Eelam, le 03-05-'83. Ils ont été arrêtés en rentrant après avoir participé dans la fête du Karl Marx. Ilssont detenus sous la loi de prévention du terrorisme. Le gouvarnement du Srilanka s'efforce toujours d'eliminer la revolution de quel façon en Tamil Eelam.

LES NOUVEAUX CAMPS MILITAIRE SONT OUVERTS A BATTICOLOA

Le gouvernement est en train de préparer l'avenir à établir des camps militaires permanentes à Kallady qui est tamoule territoire dans côté l'est de l'île.

Les peuple dans cette region sont envoyés le memorandom du protestation contre la décision du gouvernement aux 1er et 2ème députés.

Il est tout évidence que le ministre de la défense de Srilanka va établir les nouveaux camps militaires à chaque éléctorat. Les armées sont aussi données même autorité de police.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L'INDEPENDANCE DE LA JUSTICE EST VIOLE A SRILANKA

Les emeutieurs du gouvernement parti ont fait une protestation 'Non Officiel' devant les maisons des juges. ils l'ont faite parceque les juges ont condamnés le gouvernement pour violation des droits de l'hômme.

Madame Viviyan Gunewardene qui a participé dans la fête d'internationale des femmes, le 8 mars 1983, a été asseyetti un traîtement inhumain et degradant par les police. Elle a organisé une procession sur la fête d'internationalle des femmes. Quand la procession était dans la rue, les police ont agrippé les banderoles des démonstrateurs et dérangé la procession. Un photographeur a été arrêté par la police dans cette procession. et la organisateure de la manifestation Madame Gunewardene est allée au poste de police à libérer le photographeur.

La cour a demandé l'état à payer 2500 rupees comme indemnisation à Madame Gunewardene.

Les police n'ont pas pris les actions contre les émeutieurs qui ont fait la protestation et menancé les juges.

Les émeutieurs ont été emmenés par les bus du gouvernement aux maisons des juges.

Les juges ont informé aux police urgence. Mais la police a négligé leurs information.

LES TAMOULS DU SUD DE L'INDE SE BRULE DEVANT LE BUREAU DE L'AMBASSADE DE SRILANKA A MADRAS

Le jeune tamoul de 23 ans du sud de l'inde s'est brûlé devant le bureau de l'ambassade de Srilanka à Madras. Il a condamné le gouvernement de Srilanka parceque le gouvernement ne pro-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tège pas les tamouls innocents de crime incendie volotaire et menace.

Depuis le 1$^{er}$ juin 1983, les forces armées et emeulieurs de gouvernement parti attaquent les tamouls dans toute l'île. Plusieurs magasins des tamouls sont pillés et brûlés. A peu près trois cents maisons sont brûlés dans l'île. Ces sont surtout, à district de Trincomalee. Le gouvernement n'a pas pris les actions à protèger les tamouls de l'attaque.

La police qui était sur le lieu de l'ambassade pour sécurité, a arrêté le feu et l' emmené à l'hôpital. Les memorandums adressé aux président et premier ministre de Srilanka sont trouvés dans la valise qui a porté par lui. Dans ce memorandum, il a écrit qu'il a fait une protestation contre la violence sur les tamouls à Srilanka. Il a aussi écrit qu' il a partisan de la politique séparatisme de 'Tamil Eelam'.


## REPRESENTATIF DE TAMIL EELAM EST A LA SESSION D'ETUDE DE L'INSTITUTE INTERNATIONNELLE DES DROITS DE L'HOMMES A STRASBOURG

M.Xavier est en train de participer dans la 14$^{ème}$ session d'étude de l'institut internationnelle des droits de l'hommes comme un représentatif de Tamil Eelam à Strasbourg. La session d'étude est du 4 juillet à 29 juillet 483.

Mr.Xavier consacre son service pour plusieurs années à sauvegarder les droits de l'hommes à Srilanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சர்வதேச சமாதானத்தின் முதல் எதிரி ➡ அமெரிக்கா!




உலகம் முழுவதையும் இராணுவமயமாக்கத் துடிக்கும் நிக்சன் நிர்வாகம்.

அமெரிக்கா! ஜனநாயகத்தின் உச்சாணிக் கொப்பில் நிற்கும் நாடு... மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் நாடு... ஏழை நாடுகட்கு உதவும் நாடு... உலக சமாதானத்துக்கு உழைக்கும் நாடு.... பொதுவாக தமிழ்த் தலைவர்களும்... முதலாளித்துவ பத்திரிகைகளும் எம்மக்களின் மனங்களில் அமெரிக்காவைப்பற்றி விதைத்த விதைகள் இவைதான். ஆனால் உண்மை என்ன?

ஏழை நாடுகளுக்கு உதவுவதல்ல அமெரிக்கா... தனது ஏகாதிபத்தியக் கொடியைப் பறக்கவிட இடம் தேடுவதே அமெரிக்கா. உலக சமாதானத்துக்கு உழைப்பதல்ல அமெரிக்கா... சர்வதேச சமாதானத்தின் முதல் எதிரியே அமெரிக்கா.

இன்று அமெரிக்கா....

ஏறத்தாழ 35 நாடுகளில் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ அந்நாடுகளின் உள்விவகாரங்களில் அதாவது அந்நாடுகளின் சமவுடமை ஆட்சியாளர்களை... அல்லது சமவுடமையை சார்ந்த ஆட்சியாளர்களை பதவியிலிருந்து கவிழ்க்கும் சதியில் ஈடுபட்டுள்ளது.

கோடிக்கணக்கான மக்கள் உலகில் பட்டினியால் வாடுகையில் கோடிக்கணக்கான தொன் கோதுமையை அமெரிக்கா கடலிலே தாழ்க்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




சோவியத் யூனியத்தை நிர்மூலமாக்க திட்டமிடும் அமெரிக்க ஏவுகணைகள்.

சோவியத் யூனியத்தை நிர்மூலமாக்குவதற்காக ஏவுகணைகளைத் தயாராக வைத்துள்ளதுடன் தனது பகடைக்காய்களாக ஐரோப்பிய நாடுகளை வைத்திருக்கிறது. இந்த ஏவுகணைப் பதிப்புக்கெதிராக ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள போராட்ட நிலைக்கு முகங்கொடுப்பதும் அமெரிக்காவே.


இருந்தும் அமெரிக்க மக்களும், நாடுகளும் கருத்துக்கும் மாறாக ஏன் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கு மாறாக மக்கள் அரசாங்கமாகிய நிக்கரகுவாவின் சாண்டினிஸ்டாப் புரட்சியரசைக் கவிழ்க்க கிளர்ச்சியாளர்கட்கு மில்லியன் கணக்கான டாலர்கட்கு வாரி வழங்கியது.

அமெரிக்க மக்களின் கருத்துக்கு மாறாக சல்வடோரில் அப்பாவி மக்களைப் படுகொலை செய்யும் இராணுவத்துக்கு பணமும் பயிற்சியும் வாரி வழங்குகிறது. சல்வடோரில் கடந்த ஐந்து வருடங்களில் அமெரிக்காவின் ஆதரவுடன் சல்வடோரின் இராணுவம் கொன்ற அப்பாவி மக்களின் எண்ணிக்கை 40,000க்கும் மேல்.

வாரத்திற்கு 100 பேர் அரச இராணுவத்தால் கொலை செய்யப்படும் கௌதமாலாவிலும் இராணுவ ஆட்சியின் பலரை சிறைசெய்து சித்திரவதைக்குள்ளாக்கும் பாகிஸ்தானிலும் ஏன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ்மக்களை கொலை செய்து கொடுமைப்படுத்தும் இலங்கையிலும் மனித உரிமைகள் 'சிறப்பாகவே' அமுல் நடத்தப்படுகிறது என்று நற்சாட்சிப் பத்திரம் வழங்கியிருக்கிறது அமெரிக்கா.

பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கி உபகண்டத்தில் பதட்ட நிலையைத் தோற்றுவிக்கிறது. இந்தியாவில் பிரிவினைச் சக்திகட்கு ஆதரவு வழங்கி நாட்டிலே கிளர்ச்சிகளைத் தோற்றுவித்து அதில் குளிர்காய முயல்கிறது. இலங்கையின் துணையுடன் கோடிக் கணக்கான டாலர்களைக் கொட்டி டியகோகார்சியா இராணுவத்தள அமைப்பு மூலம் இந்து சமுத்திர அமைதிக்கு சவால்விட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது மண்ணில் அமெரிக்க ஏவுகணைகள் பதிக்கப்படுவதை எதிர்க்கும் மேற்கு ஜேர்மன் பிரஜையை பொலிசார் அமுக்கி நெருக்கும் காட்சி

இஸ்ரேலுக்கு ஆயுதங்களையும் நிதியையும் அள்ளி வழங்கி பாலஸ்தீனிய மண்ணைப் பறித்து... மக்களைக் கொன்று... விடுதலைப் போராட்டத்தை வேரறுக்க முயல்கிறது. திட்டமிட்ட சதியின் மூலம் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துள் பிளவுகளை ஏற்படுத்துகிறது.

போலந்தின் சொலிடாரிற்றி தொழிற்சங்கத்துக்கு ஆதரவளிப்பதாக வேடம் போடும் அமெரிக்கா சிலியில் இராணுவ அரசின் துணையுடன் தொழிற்சங்கத்தை நசுக்குகிறது. ஆப்கானில் இஸ்லாமியப் புரட்சிக்கு அமெரிக்கா ஆதரவாம் ஆனால் ஈரானில் எதிராம்.

தனது வட்டி விகிதங்களை அதிகரித்து இன்று உலகின் மொத்த பொருளாதாரப் பிரச்சினைக்கும் காரணமாகிறது.

உலக நாடுகள் ஒதுக்கி வைத்த இனவாத தென்னாபிரிக்க அரசுடன் அமெரிக்கா உறவு கொண்டாடி இனவெறியை வளர்க்கிறது.

அமெரிக்காவிலேயே வாழும் கறுப்பு இனமக்களுக்கெதிராக பாகுபாடுகளை வளர்த்து அவர்களை பஞ்சத்திலும் பசியிலும் பரிதவிக்க விடுகிறது.

இலத்தீன் அமெரிக்காவில், மத்திய கிழக்கில், உபகண்டத்தில், ஐரோப்பாவில்... இப்படி உலகின் ஒவ்வொரு பகுதியிலும் தனது இராணுவத் தலையீட்டை மேற்கொள்ளுவதன் மூலம் உலகம் முழுவதிலும் அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கி தான் குளிர்காய அமெரிக்கா விரும்புகிறது.

இவை சர்வதேச சமாதானத்துக்கு அமெரிக்கா கட்டும் சமாதியின் சில துணிக்கைகள் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ இது ஆரம்பம்..... ☆ ☆ ☆

மக்கள்.... அக்கிரமத்தையும், அடக்குமுறையையும் அதிககாலம் பொறுக்கமாட்டார்கள். அவர்கள் பொறுமை உடையும் போது அங்கே புரட்சிப் பூகம்பம் வெடிக்கும். அப்போது அவர்களே தலைவர்களாவார்கள்... அக்கிரமத்துக்கும்... ஆக்கிரமிப்புக்கும் எதிரான நேரடிப் போராட்ட வீரர்களாவார்கள். இந்த நிலையை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு சமீபத்திய ஈழத்துச் சம்பவங்கள் சாட்சி...

வல்வெட்டித்துறையில் அப்பாவித் தமிழ்இளைஞன் பழனிவேல் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட போது நூற்றுக்கணக்கான மக்கள் இராணுவ முகாமின் முன்னால் குழுமி கோஷமிட்டு கொலையை நிரூபித்து பின்னர் உடலைப் பெற்று ஊர்வலம் நடத்தியதும்...

வவுனியாவில் ஆயுதப்படையினரால் கொல்லப்பட்ட இளைஞன் குமாரது இறுதி ஊர்வலத்தில் அரச படையினரின் கடும் கட்டுப்பாடுகளை, சோதனைகளை நிராகரித்தும் பொலிசார் தம்மை புகைப்படம் எடுப்பதை அலட்சியம் செய்தும் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதும்....

இவை அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல் நல்லூரில் ஆயுதப்படையினரால் சுடப்பட்டு இறந்த சிறில்சந்திரராசாவின் இறுதி ஊர்வலத்தை — அவசரகால விசேட விதிகளான - ஊர்வலத்தடை, பிரசுரத்தடை, அனைத்தையும் நிராகரித்து பெருமளவு மக்கள் கலந்து கொண்டு ஊர்வலமாகச் சென்று... இளைஞனின் மறைவு குறித்து அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டு... மயானத்தில் இறுதி உரையும் நிகழ்த்தி... சிறீலங்காவின் அடக்குமுறைச் சட்டங்களைத் தவிடுபொடியாக்கியதும்....

நிச்சயமாகச் சாதாரண சம்பவங்களல்ல. இவை புரட்சியின் ஆரம்பப் பொறிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✻ தமிழீழ விடுதலை இயக்கங்கள் சிந்திக்குமா...? ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻

- பார்த்திபன் -

இன்று ஈழத்தில் தமிழன் கண்ட இடங்களிலெல்லாம் நாய்களைப் போல் சுட்டுக் கொல்லப்படுகிறான். வீதிகளில்... வெளிகளில்... இப்படிப் பல இடங்களில் கோரமாகக் கொலை செய்யப்பட்ட தமிழிளைஞர்களின் உடலங்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. நீதியின்றி நிகழ்த்தப்படும் இக்கொலைகட்கு விசாரணை கூட இப்போது இல்லை. தமிழினை எங்கேயும்... எப்படியும் கொலை செய்வதற்கு சிறீலங்கா அரசு தனது பூரண அதிகாரத்தை தனது படைகளுக்கு வழங்கியுள்ளது. இது மாத்திரமன்றி தமிழரின் உடைமைகள் சூறையாடப்படுகின்றன... இல்லங்கள் எரியூட்டப்படுகின்றன... தமிழ்ப் பெண்களின் கற்பு சூறையாடப்படுகின்றது... தமிழீழத்தில் குடியேறியுள்ள மலையகத் தமிழர்கள் இருபத்தி நான்கு மணிநேர அவகாசத்தில் விரட்டியடிக்கப்படுகின்றனர்... திட்டமிட்ட முறையில் திருமலை பறிக்கப்படுகிறது... வவுனியா பற்றி எரிகிறது. அரசு படைகளும் பேரினவாதக் காடையர்களும் நிகழ்த்தி வரும் பயங்கரத் தாக்குதல்கள் எம்மக்களை இன்று வாழ்வுடன் போராட வைத்திருக்கிறது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலை இயக்கங்கள் எப்படி எதிர்ப்போராட்டத்தை ஆரம்பிக்கப் போகின்றன. கொள்கையையும் இலட்சியத்தையும் கீழே வைத்துவிட்டு தமக்குள் உள்ள முரண்பாடுகளை மாத்திரம் முன்னுக்கு வைத்து ஒன்றை ஒன்று அழித்து இறுதியில் இனத்தையே அழிக்கப் போகின்றனவா அல்லது ஆக்க பூர்வமான வழியிலே செயற்படப் போகின்றனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபத்தொன்பதுகளில் வெடித்த சல்வடோரின் போராட்டமும்... எண்பதுகளில் வெடித்த எரிற்றியின் எழுச்சியும்... இவற்றை ஒத்த பஸ்க், கோர்சிக்கா, சாட், மேற்கு சகாராப் புரட்சிகளும் ஏன் நேற்று சிலியில் வெடித்திருக்கும் மக்கள் போராட்டமும் உலகப் பத்திரிகைகளில் பெரும் இடங்களைத் தினமும் பிடிக்கிறது என்றால்... அயர்லாந்திலும்... பாலஸ்தீனத்திலும் வெடிக்கும் ஒவ்வொரு குண்டுகளும் உலகச் செய்தி ஸ்தாபனங்களின் கவனங்களைத் திருப்புகிறதென்றால்... ஆண்டுக் கணக்காக போராட்டம் நடத்தும் நம்மால் ஏன் முடியவில்லை? நம் மக்களின் அவலங்களை... நம்மை கொடுமைப்படுத்தும் அரசின் சுயரூபத்தை ...ஏன் உலகுக்கு சரியாக அம்பலப்படுத்த முடியவில்லை...? ஆண்டுகள் பல சென்றும் ஆதரவுச் சக்திகளை திரட்ட முடியவில்லை. இதற்கெல்லாம் ஒரே பதில் தான் அது தான் இயக்கங்களிடையேயுள்ள முரண்பாடுகள்.

இந்த முரண்பாடுகள் களையப்படும் வரை நமது இனத்துக்கு உய்வு கிடையாது. இந்த முரண்பாடுகளை களைய முடியாதா... 'நீங்களே (இயக்கங்கள்) ஒன்றுகிறீர்களில்லை, உங்களால் எப்படி விடுதலையை வென்றெடுக்க முடியும்' என்ற மக்களின் கேள்விக்குப் பதில் கிடையாதா... நிட்சயம் பதில் உண்டு. அதற்கு முன் ஒரு விடயம் இந்த முரண்பாடு என்பது தமிழ் சமூகத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. உலகில் வாழும் ஒவ்வொரு இனத்திலும் இருக்கிறது. இந்த பாலஸ்தீன விடுதலை இயக்கங்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளைப் பார்க்கவில்லையா? உண்மையிலே எங்கெல்லாம் உடன்பாடு இருக்கிறதோ அங்கெல்லாம் முரண்பாடும் இருக்கும். இந்த உலகம் முரண்பாடுகள் நிறைந்ததாகவே இருக்கிறது. ஆனால் முரண்பாடுகள் வேதனையைத் தரும். உடன்பாடுகளே சாதனை புரியும். இதை இராணுவ அமைப்புடையவர்களும் தமிழீழ இயக்கங்கள் இப்போது தான் உணரத் தொடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபகாலங்களில் தமிழீழ விடுதலைப் போராட்
டத்தின் சில சம்பவங்களை கவனித்தால் இருவ
ருக்கெதிராக இருவர் துப்பாக்கி தூக்கிய இயக்
கங்கள் இன்று ஒன்றை ஒன்று நோக்கி உடன்
பாட்டுப் பாதையில் நடந்து வருவது தெரியும்.
தேர்தல் பகிஷ்கரிப்புக் கோரிக்கையிலும்...
சிறிலங்கா ஆயுதப்படையினர்க்கெதிரான
கந்தர்மடத் தாக்குதலிலும் தமிழீழ விடுதலைப்
புலிகளும்... தமிழீழ விடுதலை இயக்கமும் ஈடுப
பட்டதும்... அதுபோல பரபரப்பான தாக்குதல்
திட்டத்தில் புலிகளின் கந்தர்மடத் தாக்குதலி
வவுனியாவில் விமானப்படையினர்க்கெதிராக
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் தொடர்
ந்ததும் சாதாரண சம்பவங்களல்ல. இவை
உடன்பாட்டுப் பாதையிலே இயக்கங்கள் பதி
த்த தடங்கள். இவை மாத்திரமல்ல ஆயுத அற
ப்படைக் கொள்கைகளில் கூட மிக நெருக்கமா
கத்தான் உள்ளன. தவறான தலைமையை - தமி
ழர் விடுதலைக் கூட்டணியை எதிர்ப்பதில் - முதலா
ளித்துவத்துக்கு எதிரான மார்க்சீயப் பாதையை
தேர்ந்தெடுத்ததில் - சிங்கள முற்போக்குச் சக்தி
களுடன் இணைவதில் - போராட்டம் சிங்கள மக்
களுக்கெதிரானதல்ல சிறிலங்க அரசுக்கெதி
ரானதுதான் என்ற கொள்கையில் - உலக விடுதலை
இயக்கங்கட்கு ஆதரவு வழங்குவதில் - சிறி
லங்கா அரசு இயந்திரத்தை ஈழத்திலிருந்து
விரட்டியடிப்பதில் - ஆயுதம் தாங்கிய வெகு
சனப் போராட்டம் ஒன்றை ஏற்படுத்தும் நோ
க்கில் - இவ்வியக்கங்கள் ஒன்றுபட்டுத்தா
நிற்கின்றன. இவ்வொற்றுமைப்பாடு ஒப்பந்தங்
களாலோ... அறிக்கைகளாலோ உருவானது
அல்ல. சமூகச் சிந்தனை இந்தப்பாதையிலே
இட்டுவந்தது. இப்படி அடிப்படைக் கொள்
கைகளில் ஒன்றுபட்டு நிற்கும் இந்த இயக்
கங்கள் இணைந்து ஒரு தமிழீழப் பாதுகாப்பு
இராணுவம் ஒன்றை [illegible] அமைக்கக் கூடாது
என்பதுதான் எமது கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை காலமும் இந்த இயக்கங்களின் பிளவுக்கு காரணமாக இருந்தவர்கள் இனம் காணப்பட்டு விட்டார்கள். இப்போது இருப்பவர்கள் — அதும் இந்த இயக்கங்களின் பிளவை பெரு நெருப்பாக்கி குளிர் காய்பவர்கள் இப்போதும் இருக்கிறார்கள் — அவர்கள் விரைவில் இனம் காணப்படுவார்கள் —

அதே வேளையில் தொடர்ந்த கலந்துரையாடல்கள்தான் இயக்கங்களை உடன்பாட்டுப்பாதையில் கொண்டுவரும். இராணுவ அடிப்படையிலியங்கும் இந்த இயக்கங்கள் மாத்திரமல்ல வெளிநாடுகளிலியங்கும் சகல தமிழீழ விடுதலை இயக்கங்களிடையே உடன்பாட்டுக்கான ஒரேவழி தொடர்ந்த கலந்துரையாடல்கள்தான்.

எந்த இயக்கமும் தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்கத் தேவையில்லை... தம்மை அழித்துக் கொள்ளத் தேவையில்லை... ஆனால் உடன்பாடுகளின் அடிப்படையில் இயங்க வேண்டும். இனத்தின் விடுதலை ஒன்றே இலட்சியமாக வேண்டும். தொடர்ந்தும். தொடர்ந்தும் கலந்துரையாடலே இதை சாத்தியமாக்கும். அதை விடுத்து இவற்றிற்கு இயங்கங்கள் மறுக்குமானால் எமது இனத்தின் அழிவுக்கு இந்த இயக்கங்கள்தான் காரணங்களாகும்.

எனவே இனத்தின் இன்றைய நெருக்கடி நிலையை சிந்தித்து தமிழீழ விடுதலை இயக்கங்கள் அனைத்தும் உடன்பாடுகளை மேற்கொண்டு தமிழீழப் பாதுகாப்பு இராணுவத்தை உருவாக்குவதுடன், உலகரீதியாக எமது விடுதலைப் போராட்டப் பிரச்சாரத்தை மேற்கொண்டு எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். ஏனென்றால் இப்போது இல்லையென்றால் இனி எப்போதும் இல்லை. இதனை தமிழீழ விடுதலை இயக்கங்கள் சிந்திக்குமா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சஞ்சாரம்

## பிரான்ஸ்:

### பிரான்சின் நெருக்கடி நிலையினை சீராக்க கட்டுப்பாடுகளைத் தவிர வேறு வழியில்லை!



பிரான்சில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்கு நாணயவெளியேற்றத் தடுப்பு, வரி அதிகரிப்பு, சமூகநலச் செலவீட்டுக் குறைப்பு போன்ற கட்டுப்பாடுகளை மேற்கொள்வது தவிர வேறு எந்த வழியுமே இல்லை என ஜனாதிபதி மித்திரான் கூறியுள்ளார். அதுமட்டுமன்றி வேறு எந்த அரசாங்கம் பதவியிலிருந்தாலும் இத்தகைய வழிகளையே அமுல் நடத்தும் என்றும் கூறியுள்ளார். தொடர்ச்சியாக அபிப்பிராய வாக்கெடுப்புகளின் படி அரசும், ஜனாதிபதியும் மக்களாதரவை குறைவாகவே பெற்றுவருகின்றனர். எது எப்படியிருப்பினும் குறிப்பிட்ட கால எல்லைக்கு முன்னர் நாட்டில் எந்தத் தேர்தல்களும் நடத்தப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

### உள்ளூராட்சித் தேர்தல்களில் ஊழல்!

சமீபத்தில் பிரான்சில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிபெற்ற 12 நகரங்களிலும் சோசலிசக் கட்சி, வலதுசாரி எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்ற 3 நகரங்களிலும் தேர்தல் ஊழல் நடைபெற்றதாகவும் இதன் காரணமாக இத்தேர்தல்கள் செல்லுபடியாகாதெனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதே வேளையில் மேற்படி கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகத்தின் கீழுள்ள 3 நகரங்களின் நிர்வாகத்தை வலதுசாரி எதிர்க்கட்சிகளிடம் கொடுக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

### கம்யூனிஸ்ட் கட்சியின் சமாதான அணி!

உலக சமாதானத்தை வேண்டியும், ஆயுதப் பரிகரணக் கட்டுப்பாட்டை வற்புறுத்தியும் பிரான்சு கம்யூனிஸ்ட் கட்சி பெரும் ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டது. இதில் ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர். அமெரிக்காவின் நியூக்கிளியர் ஏவுகணைகளை பிரான்சு மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பு அதிகரித்து வருவதை இவ்வணி காட்டுகிறது. அதே வேளையில் வழமைக்கு விரோதமாக நேட்டோ நாடுகளின் ஏவுகணைக் கொள்கைகட்கு. பிரான்சின் சோசலிச அரசு தனது ஆதரவை தெரிவித்துள்ளது. அத்துடன் சமீபத்தில் பிரான்சு கிழக்கு பசிபிக் சமுத்திரத்தில் நியூத்திரன் குண்டொன்றை வெடித்துப் பரிசீலித்திருக்கிறது.

## அரசுக்கு எதிராக பொலிசாரும் கிளர்ச்சி!

பிரான்சின் சோசலிச அரசின் நிர்வாகக் கொள்கைகட்கும், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க முடியாது தடுக்கும் சட்ட மூலங்களுக்கும் எதிராக வலதுசாரி பொலிசார் தொழிற் சங்கங்கள் கிளர்ச்சி செய்துள்ளன. இதன் விளைவாக பல பொலிஸ் உயர் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதே வேளையில் சிறைக் காவல் அதிகாரிகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரித்தானியா.



## பிரித்தானியாவின் பிரதமராக மீண்டும் தட்சர்!

பிரித்தானியாவில் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் பதவிப் பொறுப்பை திருமதி மார்க்கிரெட் தட்சரின் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி ஏற்றுள்ளது. இத்தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி 42% வாக்குகளை பெற்று 397 தொகுதிகளையும் எதிர்க்கட்சிகளாகிய தொழிற் கட்சி 28% வாக்குகளைப் பெற்று 209 தொகுதிகளையும், லிபரல் - சமூக ஜனநாயகக் கட்சிக் கூட்டணி 25% வாக்குக்களைப் பெற்ற போதும் 23 தொகுதிகளையும் பெற்றன. பெரும்பான்மையான மக்கள் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு எதிராக வாக்களித்த போதும் எதிர்க்கட்சிகளின் பிளவு அக்கட்சியை மீண்டும் பதவிக்கு வரச் செய்துவிட்டது. இத்தேர்தலில் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தும் ஐ.ஆர்.ஏ.யின் அரசியல் பிரிவான சின்பெயின் கட்சியின் வேட்பாளர் அயர்லாந்தில் பெருவெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. மீண்டும் பதவிப் பொறுப்பை ஏற்றுள்ள திருமதி தட்சர் தமது மந்திரிசபையிலுள்ள முற்போக்காளர்களை பதவியிலிருந்து விலக்கி அப்பதவிகளை தமது ஆதரவாளர்கட்கு வழங்கியுள்ளார். விரைவில் தொழிற்சங்க உரிமைகளை கட்டுப்படுத்தும் சட்டமூலங்களை அமுலுக்கு தட்சர் கொண்டுவருவார் எனவும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோவியத் யூனியன்:

### சோவியத் யூனியனின் ஜனாதிபதியாக அந்திரப்போவ்..



சோவியத் யூனியனின் ஜனாதிபதியாக யூரி அந்திரப்போவ் தெரிவு செய்யப் பட்டுள்ளார். இது ஓர் சம்பிரதாய பூர்வமான பதவியாகும். ஏற்கனவே சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பதவியையும், பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவியையும் இவர் வகித்து வருவது தெரிந்ததே. இவரை இப்புதிய பதவிக்கு பிரேரித்ததன் மூலம் இவரது பிரதம போட்டியாளராக வர்ணிக்கப்பட்டு வந்த செர்னென்கோ, முதலாளித்துவ பத்திரிகையாளர்களால் சோவியத் நிர்வாகத்தில் பதவிப் போட்டி நிலவுவதாக பரப்பப்பட்ட வதந்திகட்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். மேலும் சோவியத் ஜனாதிபதி தமது சமீபத்திய உரையொன்றில் சோவியத் யூனியன் ஒரு போதும் தானாக நியூக்கிளியா ஆயுதங்களை உபயோகிக்க ஆரம்பிக்காது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

## அமெரிக்கா:

### இலத்தீன் அமெரிக்கா தொடர்பான றீகனின் கொள்கைகட்கு தொடர்ந்து கண்டனம்...

இலத்தீன் அமெரிக்க நாடுகள் தொடர்பாக றீகன் நிர்வாகம் கடைப்பிடித்துவரும் கொள்கைகள் தொடர்ந்து பல உலக நாடுகளினதும், தலைவர்களதும் கண்டனத்துக்குள்ளாகி வருகின்றன. சமீபத்தில் அமெரிக்கக் காங்கிரஸ் நிக்கரகுவாவில் ஆட்சியைக் கவிழ்க்க கிளர்ச்சியாளருக்கு றீகன் நிர்வாகம் அளிக்கும் நிதி உதவியையும் எல்சல்வடோரின் அரசாங்கத்துக்கு கொடுக்கவிருந்த மேலதிக நிதி உதவியையும் நிறுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. சமீபத்தில் அமெரிக்க விஜயத்தை மேற்கொண்ட ஸ்பானியப் பிரதமர் கொன்சாலஸ் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவது அநீதியானது, அமைதிக்கு பங்கம் விளைவிப்பது என்று வன்மையாகக் கண்டித்துள்ளார். அதுபோல பல தொழிற்சங்கங்களும் அரசின் இச்செயலுக்கெதிராக எதிர்ப்பியக்கங்களை ஆரம்பித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலஸ்தீனம்:

### அரபாத்துக்கு எதிராக கிளர்ச்சி!



பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான யசீர் அரபாத்துக்கும் அவரது ஃபாத் பிரிவினருக்கும் எதிராக கிளர்ச்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. கிளர்ச்சியாளர்கள் லிபியாவினதும் சிரியாவினதும் துணையுடனேயே செயல்படுவதாக அரபாத் குற்றம் சாட்டியுள்ளார். மேற்படி பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரிவுகளிடையே ஏற்பட்ட பிளவுகள் லெபனானின் பல இடங்களில் பெரும் போராக வெடித்துள்ளது. பல இடங்களில் அரபாத் ஆதரவுக் கொரில்லாக்களின் தளங்கள் கிளர்ச்சியாளர்களால் சிரியத் துருப்புக்களின் துணையுடன் கைப்பற்றப்பட்டுள்ளன. இதே வேளையில் பெரும்பாலும் கிளர்ச்சியாளர்களைக் கொண்டுள்ள அதி தீவிரவாதப் பலஸ்தீன இயக்கங்களான பலஸ்தீன விடுதலைக்கான பிரபல்ய முன்னணியும், பலஸ்தீன விடுதலைக்கான ஜனநாயக முன்னணியும் இணைந்து இராணுவ, அரசியல் போராட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளன.

## லெபனன்:

### லெபனானில் பயங்கர குண்டுத் தாக்குதல்...

லெபனானில் சிரியாவின் இரண்டு உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட ஒரு வீரர்கள் குண்டுத் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டனர். லெபனானில் சிரியத் துருப்புக்கள் மீது இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் தாக்குதல்களில் இது ஒன்றாகும். அதேவேளையில் லெபனானில் ஆக்கிரமித்திருக்கும் இஸ்ரேலியத் துருப்புக்களுக்கெதிரான கொரில்லாத் தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இஸ்ரேலிய தரப்பில் பெரும் சேதங்களும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலை இஸ்ரேலிய மக்களிடம் பெரும் கொதிப்பைத் தோற்றுவித்து இஸ்ரேலியத் துருப்புக்களை லெபனானிலிருந்து மீள அழைக்க வேண்டும் என அரசுக்கெதிராகப் போராட்டங்களை நடத்தும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. அத்துடன் லெபனானில் சிரிய - இஸ்ரேலியத் துருப்புக்களிடையே பதட்ட நிலையும் தோன்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலி:

### சிலியில் மக்கள் அரசுக்கெதிராக கிளர்ச்சி!

சிலியின் அமெரிக்க ஆதரவு இராணுவ அரசுக்கெதிராக பெரும் கிளர்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். நாடு முழுவதும் வேலை நிறுத்தங்களால் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. நாட்டின் முக்கிய சுரங்கத் தொழிலாளர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இவ்வார்ப்பாட்ட நடவடிக்கைகளில் மாணவர்கள், விவசாயிகளுடன் குடும்பப் பெண்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். இதற்கு எதிர் நடவடிக்கையாக இராணுவ அரசு பல தொழிற்சங்கத் தலைவர்களை கைது செய்து சிறையிலடைத்ததுடன் கடுமையான சட்டங்களையும் அமுலுக்கு கொண்டுவந்துள்ளது. இத்தகைய இதே கிளர்ச்சியின் மூலமே 10 ஆண்டுகட்கு முன்பு சிலியில் அலண்டேயின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது தெரிந்ததே.

## இந்தியா:

### 'அமெரிக்காவில் சீக்கிய பிரிவினைவாத இயக்கத் தளம்' - இந்திரா குற்றச்சாட்டு!

சீக்கியப் பிரிவினைவாத இயக்கத்தின் தளம் அமெரிக்காவில் இருப்பதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார். அத்தோடு சீக்கிய பிரிவினைவாதத் தலைவர் ஜெகஜித்சிங்கை அமெரிக்காவுக்கு அனுமதிக்கும் தீர்மானத்தையும் இந்திய அரசு ஆட்சேபித்துள்ளது. சமீப காலங்களாக சி.ஐ.ஏ. யின் நடவடிக்கைகள் இந்தியாவில் அதிகரித்துவருவது தெரிந்ததே. அதேவேளையில் முன்னாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் சி.ஐ.ஏ. யின் ஒற்றனாக இந்திய-பாகிஸ்தான் போரின்போது இயங்கினார் என அமெரிக்கப் பத்திரிகையாளர் செய்மோர் ஹேர்ஷ் தாம் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.


* காஷ்மீரில் நடைபெற்ற தேர்தலில் பரூக் அப்துல்லாவின் கட்சி மீண்டும் வெற்றிபெற்றுள்ளது. இத்தேர்தலில் இந்திராகாங்கிரஸ் தனது ஆசனங்களை இரு மடங்காக்கியுள்ளது.

* உலகக் கோப்பைக்கான இறுதிப் போட்டியில் இந்தியக் கிரிக்கெட் குழு மேற்கிந்தியக் குழுவைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாறும் தலைமைக்கு எதிராக ☆ ☆ ☆ ☆ குவிகின்றன கண்டனங்கள்.

தமிழீழ விடுதலையை வென்றெடுத்துத் தருவதாக மக்களின் ஆணையைப் பெற்றுவிட்டு ஆறு ஆண்டுகள் கடந்தும் இதுவரை விடுதலைப்பாதையில் ஓர் அங்குலம் கூட அடியெடுத்து வைக்காத ... விடுதலைக்கான செயற்திட்டம் எதையுமே முன்வைக்காத தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தடுமாற்றச் செயலுக்கெதிராக விடுதலையை நாடிநிற்கும் மக்களும்... இயக்கங்களும்... பத்திரிகைகளும் கண்டனம் தெரிவிக்கத் தொடங்கியுள்ளன. இதோ அவற்றில் சில...



★ கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது யாழ். மாவட்டத்தில் 10%க்கும் குறைவான மக்களே கூட்டணியை ஆதரித்துள்ளனர். மீதி 90%க்கும் மேலானோர் கூட்டணியின் 'தேர்தல் அரசியலை' நிராகரித்து தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளனர். தடுமாறும் தலைமைக்கெதிரான தமது கண்டனத்தை மக்கள் தெளிவாகவே தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களே! உங்கள் அனைவராலும் மிக அன்பாக நேசிக்கப்படும் விடுதலைப் போராளிகளாகிய நாம் அமிருக்குப் பயங்கரவாதிகளாம். "எங்கட பொடியள்" என்று நீங்கள் உரிமையோடு அழைக்கும் எம்மை அமிர் பயங்கரவாதிகளாம். எம்மை அமிர் பயங்கரவாதிகள் என் ... ர் என்றால், எம் இனத்தையே அழித்து இழித்து

கொண்டிருக்கும் சிங்கள முதலாளிகளின் ஆட்சியாளர்களையும் (ஐ.தே. கட்சியினர்) அவர்களின் கைக்கூலிகளான பொலிஸ், இராணுவத்தையும் உத்தமர்கள் என்கிறார்களா! அவர்கள் செய்வதை முற்றிலும் சரி என்று ஏற்றுக் கொள்கிறதா?

தமிழ் மக்களே! தேர்தல்கால நடிகர்களை தேர்ந்து வைத்து பிழைப்பு நடத்துகிறவர்களை இனியும் தொடர்ந்து தேர்ந்தெடுத்து, எமக்கு எதிராக செயல்படவிடப் போகிறீர்களா? அல்லது உங்களுக்காக தம்மை துச்சமாக மதித்துப் போராடும், வீரமுள்ள, உறுதியுள்ள விடுதலைப் போராளிகளோடு சேர்ந்து நீங்களும் சிறீ லங்கா அரசயந்திரங்களை தமிழீழத்திலிருந்து அகற்றப் போராடப் போகிறீர்களா...?

- தமிழீழ விடுதலை இராணுவம் -

★ இதுவரை காலமும் தமிழீழ விடுதலையைத் தேர்தல் வெற்றிக்காக மேடைக் கோஷமாகப் பயன்படுத்தும் சில தீயசக்திகள் அபிவிருத்திச் சபைத் தேர்தலின் வெற்றியினால், ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் பதவிகளினாலேயே இன்றும் தமிழீழ மக்களுக்கு எந்த அபிவிருத்தியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்த முடியவில்லை. இனியும் ஏதோ உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்று தமிழீழ விடுதலைக்கு இட்டுச் செல்வது போல் வழமையான "தேர்தல்கால தமிழீழ கோஷத்தை" முன்வைத்து சிங்கள சிறீலங்கா அரசின் ஆட்சியதிகாரத்திற்கு முண்டு கொடுக்க வந்துவிட்டார்கள். இவர்களுக்கு வேண்டியதெல்லாம் பதவியொன்றே தவிர வேறில்லை.

- தமிழீழ விடுதலைப் புலிகள் -

★ சிறீலங்கா ஆயுதப்படைகள் தமிழீழத்திலிருந்து முற்றாக வெளியேற்றப்படும்வரை, பயங்கரவாதத் தடைச் சட்டம் கிழித்தெறியப்படும்வரை சிறீலங்கா நாடாளுமன்றத்துக்கு போவதில்லை என்ற உறுதியான முடிவெடுத்து அதை அவர்கள் உலகுக்கு அறிவிக்கவேண்டும். அநீதிகட்கு முற்றுப் புள்ளி வைக்கக்கூடியதாக தலைவர்கள் பதவிகளைத் துறக்கவேண்டும்.

- [illegible] -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பாராளுமன்றத்துக்குச் சென்ற தமிழர்கள் 1977இல் மேற்கொண்டுவரும் தன்மியல்சார் கோமாளி நாடகங்கள் ஆளும் கட்சி வழங்கிய மந்திரி அந்தஸ்து, பொருளற்ற பயனற்ற உரையாடல்கள், அவற்றின் விளைவாகக் கிடைத்த அதிகாரமற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ......

....ஈழத்தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறீலங்கா பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் உறுப்பினர்களாக இருப்பது பொருளற்றதும் நகைப்புக்கிடமானதுமாகும்....

....தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈழத்தமிழர்களை ஏமாற்றுவதை நிறுத்த வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.....

- அவுஸ்திரேலிய ஈழத்தமிழர் கழகம்-

★ இன்று தமிழ் மக்களின் அழிவுகளுக்கும், அவலங்களுக்கும் காரணம் தலைமையில் ஏற்பட்ட நெருக்கடியாகும். 1958இல் தொடங்கிய இனக்கலவரம் இன்று பழம் பேட்டையும் கண்டு வெறியாட்டத்தை நிறுத்தி தென்னிலங்கையில் தீப்பற்றியெரிகிறது 'தமிழ் மக்களின் சக்தியை அணிதிரட்டி விடுதலைக்குப் பாவிக்கும் பொறுப்பை வேண்டுமென்றே தட்டிக்கழித்து வருகிறார் அமிர்தலிங்கம்.....

- 'அமிர்தலிங்கம்' எனும்
சிறப்பு வெளியீடு.

★ மாவட்ட சபையையும் அரசுடன் பேச்சுவார்த்தை என்ற சப்பாணி முறையையும் ஏற்றுக்கொண்ட உடனேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேடம் கலைந்துவிட்டது. தீரச் செல்வநாயகத் தலைவரின் காலத்துக்குப்பிறகு சிறிது சிறிதாக பதவி ஆசைக் கிடங்கில் விழுந்துவிட்ட த.வி. கூட்டணியார் - தங்களிலே சில பேரைப் பிரித்து, அவர்களுக்கு ஜெயவர்த்தன மந்திரிப் பதவியும் பிறபதவிகளும் கொடுத்ததும், (இவர்களும்) பதவிச் சுகத்தை இழந்திடக் கூடாது என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள்...

- சாலை இளந்திரையன் -
பேராசிரியர் தில்லிப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்பம்.



செல்வம்.


இவர்கள் இரவிலே 'சீருடையாளர்களால் இழுத்துச் செல்லப்பட்டவர்கள்....
விடுதலைப் போராளிகள் என்பதால் விடிகையிலே வீதி ஓரத்தில் கொலைபட்டுக் கிடந்தவர்கள்....
மரணம் என்னவோ இவர்களது உடலுக்குத்தான் இவர்களது இலட்சியத்தை.... ஈழவிடுதலைப் போராட்டத்தை அழிக்க ஆக்கிரமிப்பு அரசால் முடியுமா...? நாளை மலரும் ஈழத்தில் இவர்கள் மீண்டும் வந்து வாழப் போவதைத்தான் அந்த அரசால் தடுக்கமுடியுமா...?

தோழர்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 'தமிழ் முரசு' தனது பங்களிப்பினை சரிவரச் செய்வதற்கு தமிழ்முரசை நெறிப்படுத்துவதுடன் விடுதலை தொடர்பான ஆக்கங்களையும் அனுப்புங்கள்.
சகல தொடர்புகட்கும்...

THE EDITOR
'TAMOUL MOURASSOU'
10, RUE DES MARTYRS.
75009 - PARIS.(FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எரியூட்டப்பட்ட எங்கள் நகரங்களின் சாம்பல் சிதறல்கள்தான் இது. இன்று ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசபடையினரால எங்கள் நகரங்கள் எரியூட்டப்படுகின்றன. எங்கள் மக்கள் கொலை படுகிறார்கள்... வதை -படுகிறார்கள்.. எங்கள் உடமைகள் கொள்ளை போகின்றன. எம்மைப் பிணைத்துள்ள அடிமை விலங்குகள் உடையும்வரை இந்த அவலங்-கள் தான் எம் சொந்தம்..

எனவே அடிமை விலங்குகளை உடைத்து இந்த அவல இருளிலிருந்து எம் மக்களை மீட்பதற்-கான ஒரே வழியான தமிழீழத்தை மீட்கும் வெகுஜனப் போராட்டத்தை தாமதப்படுத்தாது தமிழீழ இயக்கங்கள் உடனே தொடங்கவேண்-டும்.. இல்லையேல் இறப்புகட்கு மட்டும் நாம் சொந்தக்காரர்களாகிவிடுவோம் .

வெளியீடு

தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org